
# திராவிடத்தால் வாழ்கிறோம்

957

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

28

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுப்பூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

முத்தமிழறிஞர் கலைஞரின் தோள் மீது ஒரு கையையும், கழகத்தின் இனமானப் பேராசிரியர் அவர்களின் தோள் மீது மற்றொரு கையையும் போட்டவாறு, நாகூர் ஹனிபா நிற்கும் புகைப்படம் ஒன்று கம்பீரமானது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தை, அரை நூற்றாண்டுக்கு மேல் கட்டிக்காத்த இருபெரும் தலைவர்கள் மீது, இப்படி தோள் மீது கை போட்டுக்கொள்ளும் அளவுக்கு, உரிமை கொண்ட மற்றொரு நபர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சமகாலத்தில் இருக்கவில்லை.

காரணம், கலைஞர், பேராசிரியர் அவர்களின் வயதையொத்தவர் ஹனிபா என்பது மட்டுமல்ல; இயக்கமே தனது சுவாசம் என வாழ்ந்தவர் ஹனிபா. “என் இரத்தத்தை எடுத்து சோதித்தால் கூட, அதில் வேறு கட்சியின் கலப்பு இருக்காது” என்று கூறியவர் ஹனிபா. அ.தி.மு.க. உருவானபோது, ஹனிபாவை இணைக்கப் பல்வேறு முயற்சிகளை எம்.ஜி.ஆர். மேற்கொண்டார். ஆனால், ஹனிபாவோ, “எனக்கு ஒரே இறைவன் அல்லாஹ்....நான் இருக்கும் ஒரே இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்'' என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டார்.

“ஹனிபா ‘கற்பு’ தவறாதவர். ஆடாமல் அசையாமல் அலைபாயாமல் சபலத்திற்கு ஆட்படாமல் எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும், ‘தொடேன்’, ‘தொடேன்’ என்கிற உறுதிமிக்க இசைவாணர், நாகூர் ஹனிபா” என்ற கலைஞரின் பாராட்டே, ஹனிபாவின் அரசியல் தூய்மைக்கும், தி.மு. கழகத்தின் மீது கொண்ட ஒப்பற்ற விசுவாசத்திற்கும் கல்வெட்டுச் சான்று.

அதுமட்டுமல்ல, எம்.ஜி.ஆர்., தி.மு.க.வில் இருந்தபோது எம்.ஜி.ஆரைப் புகழ்ந்து பாடிய பாடல் ஒன்றை, அவர் பாடவே இல்லை. எம்.ஜி.ஆர். ஆட்சியின் குறைகளைச் சுட்டித்தான் அதன்பிறகு பாடல்கள் தெறித்தன. தனது இல்லத்திற்கு கூட ‘கருணாநிதி இல்லம்’ என்று உள்ளத்தில் இருந்து பெயர் சூட்டியவர் ஹனிபா.

அந்த ஆத்மார்த்த நட்பின் உள்ளக்கிடங்கு விளைச்சலில் உச்ச ஸ்தானத்தில் ஒலித்த பாடல்தான் ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே...’ இன்றைக்கும் கழக மேடைகளில் இந்தப் பாடல் ஒலிக்காமல் கூட்டம் முடிவுறாது.

நாகூர் ஹனிபாவின் பாடல்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞரை ஆகியோரின் புகழை உச்சிக்கு கொண்டு சென்ற அதேவேளையில், அன்றைய ஆட்சியாளர்களை நோக்கி, பீரங்கி குண்டுகளைப் போல தெறிக்கவும் தவறவில்லை. “ஆறிலும் சாவு, நூறிலும் சாவு அஞ்சாமல் ஓடிவா!” என்று இந்தி எதிர்ப்புப் போராட்டக் களத்தில் ஒலித்த அவரது பாடல், கழகத் தொண்டர்களின் நரம்புகளை முறுக்கேற்றின.

“கீழே இறங்கு..
மக்கள் குரலுக்கு இறங்கு.
ஆண்டது போதும்.
மக்கள் மாண்டது போதும்”

என்ற பாடலும்

“சோறு போடாத சோம்பேறியே!
பதவி நாற்காலி உனக்கொரு கேடா?
ஏறிய பீடத்தில் இருந்து சுவைத்திட,
இது உன் பாட்டன் வீடா?”

என்ற பாடலும் நாகூர் ஹனிபாவின் குரலில் ஒலித்தபோது, கட்சி எல்லைகளைக் கடந்து சாமானிய மக்களையும், அன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிரான மனநிலைக்கு மாற்றியது; தி.மு.கழகத்திற்குப் பேராதரவை ஏற்படுத்தியது. இந்த இரண்டு பாடல்களையும் எழுதியவர் ஹனிபாவின் நண்பரான நாகூர் சலீம்.

### கலைஞர் தந்த வாய்ப்பு!

நாகூர் ஹனிபா, கழகத்தில் எக்காலத்திலும் எந்தப் பதவியையும் எதிர்பார்க்காதவர். மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் கலைஞர் பேசும்போது, “என்னுடைய இதயம் கனத்துப் போகிறது. ஏனென்றால், நம்முடைய அருமை நண்பர் நாகூர் ஹனீபா அவர்கள் இங்கே பாடும்போது எனக்குப் பல நினைவுகள். அவரும் நானும் ஏறத்தாழ சம வயதினர். ஒன்றிரண்டு வயது ஏற்றத்தாழ்வு இருக்கலாம். அந்தக் காலத்தில் நீதிக்கட்சி தொடர்புகொண்டு நடைபெற்ற முஸ்லிம் லீக் மாநாடுகளில் - பிறைக் கொடி பறந்த அந்த மாநாடுகளில் - நம்முடைய வீரமணி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் - பிறைக் கொடியைப் பிடித்த கை இந்தக் கை, சிறுவனாக இருந்து பிறைக் கொடியை ஏந்திய கை இந்தக் கை.



# என் இரத்தம் கழகம்!

எனினும், 1957-ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் தொகுதியில் வேட்பாளராக நிறுத்தினார் அண்ணா. தேர்தலில் ஹனிபா வெற்றிபெற வில்லை. அண்ணாவுக்கு பின்னர் சட்ட மேலவை உறுப்பினராக்கினார் கலைஞர். 2002-ஆம் ஆண்டில் வாணியம்பாடி இடைத்தேர்தலில் கழகத்தின் சார்பில் நாகூர் ஹனிபா வேட்பாளராக நிறுத்தினார் கலைஞர். அப்போதும் வெற்றிபெறவில்லை. வஃக்பு வாரிய தலைவராக்கினார். வாணியம்பாடி இடைத்தேர்தலில்தான் ஹனிபா வெல்லவில்லையே தவிர, கலைஞரின் உள்ளத்தை அவர் எப்போதோ வென்றுவிட்டார். பலமுறை அதனை கலைஞர் வெளிப்படுத்தியும் உள்ளார்.

ஹனிபாவின் 70-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட முத்துவிழா மலரில், “அரசியலில் நான் அடியெடுத்து வைத்த சிறுபிராயம் தொட்டு நாகூர் அனிபாவை அறிவேன். அன்று கேட்ட அதே குரல். வளமிக்க குரல், அனை வரையும் வளைக்கும் குரல். ஆதிக்கக்காரர்களின் செவிப்பறை கிழிக்கும் இடியோசைக் குரல். அந்தக் குரல் மட்டுமா இன்றளவும் நிலைத்து நிற்கிறது? அவர் நெஞ்சில் பதிந்த கொள்கை உறுதியுமன்றோ ஆடாமல் அசையாமல் அப்படியே நிலைத்து நிற்கிறது” என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

21.06.2008 அன்று சென்னை தீவுத் திடலில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மணிவிழா

> அன்று கேட்ட அதே குரல். வளமிக்க குரல், அனை வரையும் வளைக்கும் குரல். ஆதிக்கக்காரர்களின் செவிப்பறை கிழிக்கும் இடியோசைக் குரல்.

அந்தப் பிறைக் கொடியைப் பற்றி பாடியவர், அன்றைய மாணவராக, இளைஞராக இருந்த நம்முடைய நாகூர் அனீபா அவர்கள். அந்த இசை முரசின் நாதம் இதுவரையிலே அதே தொனியிலே ஒலித்துக் கொண்டிருக்கின்ற காட்சியினை நீங்கள் காண்கிறீர்கள். சிறு களைப்பு ஏற்பட்டாலும்கூட அந்தக் குரல்வளம் கொஞ்சமும் குறையவில்லை. எப்படி நாகூர் ஹனிபாவின் குரல்வளம் கொஞ்சமும் குறையாமல் இருக்கிறதோ அதைப் போலத்தான் முஸ்லிம் லீக்கின் பலமும் குறையாமல் இருக்கிறது” என்றார்.

அத்தகைய புகழ்மிக்க கம்பீரக் குரலோன் நாகூர் ஹனிபா 2015-இல் மறைவுற்றபோது, “என்னுடைய ஆருயிர் சகோதரரை இழந்து தவிக்கிறேன். நீங்கள் சிந்துகின்ற கண்ணீரோடு என்னுடைய கண்ணீரையும் கலந்து, அவருடைய புகழ் என்றென்றும் நிறைந்திருக்க வேண்டும், வாழவேண்டும், வாழ்க ஹனிபா அவர்களின் புகழ்” என்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, கண்ணீர் வடித்தார் கலைஞர்.

ஹனிபா அவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமென்ற கலைஞரின் விருப்பத்திற்கேற்ப, 2024ஆம் ஆண்டு டிசம்பரில் ஹனிபாவின் நூற்றாண்டு தொடங்கிய தருவாயில், நாகப்பட்டினம் நகரில் அமைந்துள்ள தைக்கால் தெருவிற்கு ‘இசை முரசு நாகூர் இ.எம்.ஹனிபா தெரு’ என்றும், புதிதாக அமைக்கப்பட்ட சிறுவர் பூங்காவிற்கு ‘இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா’ என்றும் பெயர் சூட்டினார் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

ஹனிபா உடலால் மறைந்திருந்தாலும், ‘கல்லக்குடி கொண்ட கருணாநிதி வாழ்கவே’, ‘ஓடி வருகிறான் உதயசூரியன்’ என தி.மு. கழகத் தொண்டர்களின் நாடி நரம்பெல்லாம் ஊறிப்போன அந்த உணர்வெழுச்சி மிக்க பாடல்களால் வாழ்ந்துகொண்டே இருப்பார், இயக்கத்திற்கு வலுசேர்த்துக்கொண்டே இருப்பார்..!.

...நீளும்

## கல்வி நிலையங்களில் களையப்படும் அழுக்கு!

பள்ளிகளில் சாதிய எண்ணம் கொண்ட ஆசிரியர்கள், பணியில் இருக்கக்கூடாது. அவர்கள் மீது, ஒழுங்குநடவடிக்கை எடுக்க வேண்டும் என பள்ளிக்கல்வித் துறையின் உத்தரவுக்கு கல்வியாளர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

சமூகத்தில் நிலவும் சாதியப் பாகுபாடுகளைக் களைவதற்கு, அரசு தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகிறது. சாதிப் பாகுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் வகையில் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்றங்களுக்கு முன்னுரிமை அளித்து, அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எனினும், சில சாதி அமைப்புகள் தங்களின் சுய ஆதாயத்துக்காக மக்களை சாதிய ரீதியாக ‘வாட்ஸ் அப்’ குழுக்களில் ஒருங்கிணைத்து, பாகுபாட்டினை தூண்டுவதும் நடக்கிறது. குறிப்பாக, பள்ளி, கல்லூரிகளில் இயங்கும் சாதிய குழுக்கள் மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்குகின்றன.

இதைக் களைவதற்கு, நீதியரசர் சந்துரு தலைமையிலான ஆணையத்தை அமைத்து, பரிந்துரைகளைப் பெற்ற அரசு, பள்ளி மாணவர்கள் சாதி அடையாளம் கொண்ட கயிறுகளைக் கட்டுவதற்குத் தடை செய்தது. அதன் தொடர்ச்சியாக, பள்ளி பெயரில் சாதி அடையாளங்களை நீக்கவும் உத்தரவிட்டது. பள்ளி, கல்லூரி மாணவர் விடுதிகளின் பெயரை சமூகநீதி விடுதி என மாற்றியது. இத்தகையச் சூழலில், பள்ளிகளில் சாதி எண்ணம் கொண்ட ஆசிரியர்களுக்கு எதிராக பள்ளிக்கல்வித் துறை சாட்டையை சுழற்றியுள்ளது. பள்ளிகளில் சாதிய எண்ணம் கொண்ட ஆசிரியர்கள் பணியில் இருக்கக்கூடாது, அவர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும். மாணவர்களின் சாதி அடையாளங்கள் ரகசியம் காக்கப்பட வேண்டும் என மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

சாதி சமூகத்தின் வேர்களை அகற்றினால்தான், சமத்துவ, சமூகநீதி நோக்கம் முழுமையாக நிறைவேறும் என்பதை உணர்ந்த, உணர்த்தும் அரசுக்கு தமிழ்ச் சமூகமாக ஒருங்கிணைந்து ஆதரவளிக்க வேண்டும் என கல்வியாளர்கள் பலரும் வரவேற்பு தெரிவிக்கின்றனர்.

கல்வி நிலையங்களில் இருந்து சமூக அழுக்கு அழிக்கப்படட்டும்!

## ஃப்ளாஷ்பேக்



### குடியாத்தம் நகரில் தலைவர்!



குடியாத்தம் புவியரசி

2002-ஆம் ஆண்டு, மார்ச் மாதம், ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்தார். அப்போது, நான் நகர்மன்றத் தலைவராக இருந்தேன். வேலூர் மாவட்டத்தில், கழகத்தின் சார்பில் இருந்த ஒரே நகர்மன்ற தலைவர் நான் மட்டும்தான். அப்படியான வாய்ப்புடன் தலைவரை வரவேற்று மரியாதை செய்தேன். இன்றைய பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலரும் பங்கேற்ற மேடையில், தலைவரை வாழ்த்தி வரவேற்றது மறக்க முடியாத நினைவு.

– குடியாத்தம் புவியரசி,
தலைமைக் கழகப் பேச்சாளர்,
தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், வேலூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### புதிய பொதுச்செயலாளர்!

24.04.1955 அன்று, சென்னை தியாகராயர் கல்லூரியில் கழகப் பொதுக்குழு கூடி, நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை, கழகப் பொதுச் செயலாளராக ஒருமனதாகத் தேர்வு செய்தது. ஈ.வெ.கி.சம்பத் முன்மொழிய, என்.வி.என், கலைஞர், அன்பில் தர்மலிங்கம், சேலம் ஜி.பி.சோமசுந்தரம், மதுரை முத்து, செங்கை கே.டி.எஸ்.மணி, இராமநாதபுரம் எம்.எஸ்.இராமசாமி, சென்னை இளம்பரிதி, தஞ்சை என்.எஸ்.இளங்கோ, கோவை இராமானுஜம், தென்ஆற்காடு சாம்பசிவம், வடஆற்காடு முல்லைசத்தி, திருநெல்வேலி எம்.எஸ்.சிவசாமி, நாஞ்சில் மனோகரன் ஆகியோர் வழிமொழிந்தனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131